# ஜீலை 13 - புனித ஹென்ரி (972-1024)

ஒரு தூய ஆயர் இவருக்கு கல்விப் பயிற்சி அளித்தார். 995-ஆம் ஆண்டில் இவர் பவேரியா நாட்டின் கோமகனானார். 1002-ஆம் ஆண்டில் இவருடைய உறவினரான பேரரசர் இறந்ததும் இவர் பேரரசரானார். இவருடைய உள்ளத்தில் உயிருள்ள விசுவாசம் இருந்தது. நித்திய உண்மைகளைப் பற்றி ஒவ்வொரு நாளும் தியானித்து அந்த விசுவாசத்தை இவர் காத்து வளர்த்து வந்தார். தமது பதவியைப் பற்றி இவர் பெருமை கொண்டவரல்ல. அனைத்திலும் கடவுளது மகிமையைத் தேடினார். திருச்சபையின் நலனைப் பற்றி எப்பொழுதும் மிக விழிப்பாய் இருந்து திருச்சபையின் நலனைப் பற்றி எப்பொழுதும் மிக விழிப்பாய் இருந்து திருச்சபையின் கட்டுப்பாட்டைக் காத்து வர ஆயர்கள் வழியாக பெருமுயற்சி செய்து வந்தார். நாட்டிலும் நாட்டுக்கு வெளியிலும் எதிரிகள் இவரைத் தாக்கினாலும் எப்பொழுதும் இவருக்கே வெற்றி கிடைத்தது. எதிரிகளை இரக்கத்துடன் நடத்துவார். வெற்றியைப் பற்றி அளவுக்கு மிஞ்சிய குதூ கலம் கொள்ளமாட்டார். திருச்சபைக்கு அநேக சலுகைகளை இவர் செய்தார். வற்புறுத்தப்பட்டாலன்றி போருக்குச் செல்லமாட்டார். தாழ்ச்சியையும், நீதியையும் நேசித்தார். ஒருமுறை இவர் கொலோஞ் நகர் ஆயரை தக்க மரியாதையுடன் நடத்தவில்லை. அதற்காக அவரது பாதத்தில் வீழ்ந்து மன்னிப்புக் கேட்டார். இவர் அரச பதவியைத் துறந்து சந்நியாசியாக விரும்பினார். என்றாலும் ஒரு பரிசுத்த மடாதிபதிக்குக் கீழ்ப்படிந்து அரச பதவியிலிருக்க இணங்கினார்.




இவருடைய மனைவியின் பெயர் குனகுந்தா இருவரும் விரத்தராக வாழ்ந்தனர். இவர் தம்மை சாவுக்குத் தயாரிக்கும்படி ஒரு சந்நியாச மடத்திற்கச் சென்றார். நித்திய நடுவரைச் சந்திக்க தன் ஆன்மாவை இவ்விதம் தயாரித்தார்.

**சிந்தனை:**

ஒவ்வொருவனும் கடவுள் தன்னை வைத்திருக்கும் நிலையில் இருந்து கொண்டே ஏராளமான நன்மை செய்யலாம். அதற்கான வாய்ப்புகள் ஒவ்வொரு நாளும் வருகின்றன.

**செபம்:**

ஆண்டவரே, நாங்கள் நேரத்தை நன்கு பயன்படுத்தும் வரத்தைத் தாரும்.